5—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***13852—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் சட்டமன்றத் தொகுதி, துறையூர் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது தொடர்பான கருத்துரு தற்போது மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இக்கருத்துருவினைப் பரிசீலித்து மேற்படி துறையூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதியதாக கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய துறையூர் வட்டாட்சியர் அலுவலக கட்டடத்தில், 1970 ஆம் ஆண்டு முதல் துறையூர் வட்டாட்சியர் அலுவலகம், ஆதி திராவிடர் தனி வட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட பழங்குடியினர் நல அலுவலகம், சார்–பதிவாளர் அலுவலகம், வனச் சரகர் அலுவலகம், இ–சேவை மையம், ஆதார் மையம், கிளைச் சிறைச் சாலை, சமூகப் பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் அலுவலகம், வட்ட வழங்கல் அலுவலகம் உள்ளிட்ட

[2024 பிப்ரவரி 13

அலுவலகங்கள் 50 ஆண்டுகள் பழமையான ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அங்கே புதிய கட்டடம் கட்டுவதற்கு, CRA அலுவலகத்திற்கு கடந்த செப்டம்பர், 2022-ல் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பரிசீலனை செய்ய ஏதுவாக, புதிய வட்டாட்சியர் அலுவலகத்தை அமைத்துத் தருவார்களா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாட்சியர் அலுவலகத்திற்கு, ரூபாய் 5 கோடியே 6 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டுவதற்கு, அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளது. தகுந்த பரிசீலனை செய்து உடனடியாக வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் வட்டத்தில், உப்பிலியாபுரம் பேரூராட்சி, பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சி, உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் உள்ள 18 ஊராட்சிகளைச் சேர்த்து 34 வருவாய் கிராமங்கள் இருக்கின்றன. அரசாணை எண் 279-ன்படி, 500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பகுதியாகவும் இருக்கிறது. இங்கிருக்கக்கூடிய பழங்குடியின மக்கள் வாழக்கூடிய தென்புறநாடு கிராமத்திலிருந்து 16 குக்கிராம மக்கள் மலையிலிருந்து அனைத்துத் தேவைகளுக்கும் 40 கிலோ மீட்டர் கீழ்ப்பகுதியான உப்பிலியாபுரம்தான் வர வேண்டும். உப்பிலியாபுரம் பகுதி மையப் பகுதியாக உள்ளது. எனவே, இங்கிருந்து துறையூர் தாலுகாவிற்குச் செல்ல வேண்டுமென்றால், 45 கிலோ மீட்டர் பயணம் செய்ய வேண்டிய சூழல் இருக்கிறது. கிழக்குத் தொடர்ச்சி மலையான பச்சை மலையும், கொல்லிமலையும் சுற்றியிருக்கக்கூடிய பகுதியில் உப்பிலியாபுரம் பகுதி இருக்கிறது.

தன்னலம் மறந்து, மக்கள் நலனையே நாளும், பொழுதும் நினைத்து தன்னிகரில்லா ஆட்சி நடத்தும் மாண்புமிகு தமிழக

2024 பிப்ரவரி 13]

முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, உப்பிலியாபுரம் பேரூராட்சி, பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சி மற்றும் உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் 18 ஊராட்சி மக்களின் கோரிக்கையாக இருக்கக்கூடிய உப்பிலியாபுரம் பகுதியை மையமாகக் கொண்டு புதிய வட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தை நாங்கள் கவனத்திலே வைத்துக்கொள்கிறோம். இதுபோன்று நிறைய இடங்களில் வட்டங்களைப் பிரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அவற்றைத் தகுந்த நேரத்தில், நிதிநிலைக்கேற்றாற்போல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்துபேசி, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியை உள்ளடக்கிய பொன்னேரி வட்டத்தில் 9 பிர்காக்கள் இருக்கின்றன. 675 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட அந்த வட்டம் சுமார் 4 இலட்சம் மக்கள்தொகையைக் கொண்டதாக விளங்குகிறது. பெருவெள்ளம் வந்த காலத்திலே அங்குள்ள வருவாய்த் துறை அதிகாரிகள், பணிச்சுமையின் காரணமாக மிகவும் சிரமப்பட்டார்கள். பல வருடங்களாக, அந்த வட்டம் பிரிக்கப்பட வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்து வருகின்றேன். 13–4–2022 அன்றுகூட சட்டமன்றத்தில் இதுசம்பந்தமாக நான் அரசின் கவனத்தை ஈர்த்திருக்கின்றேன். தமிழ்நாட்டிலேயே பெரிய தாலுகாவாக இருப்பதால், தயவுசெய்து 9 பிர்காக்களைக் கொண்ட அந்தத் தாலுகாவைப் பிரித்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நேற்யைதினம் நடைபெற்ற கூட்டத்தில்கூட, இந்தக் கோரிக்கையை வலியுறுத்திச் சொன்னார்கள். பொன்னேரி பெரிய வட்டமாக இருக்கிறது என்பது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. எதிர்காலத்தில் வட்டங்கள் பிரிக்கப்படுகின்ற நேரத்தில், பொன்னேரிக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தனபால் அவர்கள்.

திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதி, அவினாசி வட்டாட்சியர் அலுவலகம் மிகப் பழமையான அலுவலகக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் வசதி குறைவாக இருக்கிறது. ஆகவே, அவினாசி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் புதிதாக வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு ஒரு கணக்கெடுப்பை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்படி வருகின்றநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை அரசாங்கம் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.

திரு. S. அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகம், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட ஒரு பழமையான அலுவலகம். அந்த அலுவலகம் தற்போது மிகவும் சிதிலமடைந்துள்ளது. மழைக்காலத்தில் dampness, ஈரக்கசிவு ஏற்படுகிறது.

2024 பிப்ரவரி 13]

அதுமட்டுமல்லாமல், அந்தக் கட்டடம் road level*-ல் இருந்து,* ground level*-க்கு 3 அடி தாழ்வாக இருக்கின்ற காரணத்தினால், மழைக் காலங்களில் மழை நீர் உள்ளே தேங்குவதால் அலுவலர்கள் வேலை செய்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். பொதுமக்கள் அலுவலகத்திற்கு வந்து செல்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, ஆபத்தான நிலையில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. இதுபோன்று பழமையான கட்டடங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றையெல்லாம் புதுப்பிக்க அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு சென்றிருக்கிறோம். எந்தெந்த வட்டாட்சியர் அலுவலகங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றனவோ, எந்தெந்த* RDO *அலுவலகங்கள் மோசமான நிலையில் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, முன்னுரிமை அடிப்படையில் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதிக்கு என வட்டாட்சியர் அலுவலகம் 2006–2011-ல் தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் தனியாகப் பிரிக்கப்பட்டு, இன்றுவரை போதிய இடவசதியில்லாமல் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அதேபோல அரசு அலுவலகங்களான வட்டாட்சியர் அலுவலகம், உணவுப் பொருள் வழங்கல் துணை ஆணையாளர் அலுவலகம், கூட்டுறவு வங்கி, நீதிமன்றம் போன்ற அரசு அலுவலகங்களெல்லாம் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால், பொதுமக்கள் போதிய வசதியில்லாமல்*

தினந்தோறும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, தமிழக அரசால் 574 ஏக்கர் அரசு தரிசு புறம்போக்கு, தனியார் வசமிருந்த 69 ஏக்கர் நிலங்கள் இன்றைக்கு மீட்கப்பட்டிருக்கின்றன. அந்த இடத்தில் ஓர் ஒருங்கிணைந்த வளாகத்தை உருவாக்கி, மேற்சொன்ன அரசு அலுவலகங்களை, பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, சென்னையில் ஆக்கிரமிப்பில் இருந்த நிறைய இடங்களை வருவாய்த் துறையின்மூலமாக நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்படி எடுக்கின்ற இடங்களில் அரசுத் துறையைச் சார்ந்த கட்டடங்களைக் கட்டவேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களிடத்தில் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அவ்வாறு கட்டடங்கள் கட்டுகிற நேரத்தில் அந்த அலுவலகங்கள் தனித்தனியாக இல்லாமல், எல்லாம் இணைந்த ஒரு பெரிய கட்டடமாக அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கட்டடங்கள் கட்டுகிற நேரத்தில் உங்களுடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

6—

புனல் மின் திட்டம்

***10329—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—